# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2015.07.09

**நிதிச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2015**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**<u>பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்கான உத்தேச மருத்துவக் காப்புறுதித் திட்டம்.</u>**

தற்போது பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களினால் நிறுவன மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மருத்துவக் காப்புறுதித் திட்டம் தவிர பல்கலைக்கழகக் கட்டமைப்பில் பணிபுரியும் ஊழியர்களுக்கான பொதுவான காப்புறுதித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இந்த விடயம் பாராளுமன்றத்தில் பொது முயற்சிகள் பற்றிய குழுவிலும் கலந்துரையாடப்பட்டதுடன் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தினை தாபிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அங்கு வலியுறுத்தப்பட்டது.

01) இதற்கமைய, 2015 மார்ச் மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 918 ஆவது கூட்டத்தின்போது பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் இணக்கப்பாட்டுடன் 2015 ஆம் ஆண்டு முதல் மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றைத் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த மருத்துவக் காப்புறுதித் திட்டத்தில் இணைந்துகொள்வது கட்டாயமாக்கப்படவில்லை.

02) இந்த மருத்துவக் காப்புறுதித் திட்டமானது கீழ் குறிப்பிடப்படும் 03 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

i) மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்
ii) ஆபத்தான நோய்களுக்கான காப்பீட்டுத் திட்டம்
iii) திடீர் விபத்துக்கள் மற்றும் இயற்கை மரணக் காப்பீட்டுத் திட்டம்

உத்தேச மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் அனுகூலங்கள் மற்றும் நிபந்தனைகளை அங்கத்தவர்கள் அறிந்துகொள்வதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

03) **தகைமைகள்**

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் சகல செயற்பாட்டு ரீதியான அங்கத்தவர்களும் இந்த காப்பீட்டுத் திட்டம் 01 அல்லது 02 இற்கான தகைமைகளைப் பெற்றுள்ளார்கள்.

## 04) அனுகூலங்கள்

| ஒரு வருடத்திற்கான உள்ளக சிகிச்சை | காப்பீட்டுத் திட்டம் 01 | காப்பீட்டுத் திட்டம் 02 |
|---|---|---|
| ஒரு சந்தர்ப்பத்திற்கான உச்ச அளவு (ஒரு வருடத்திற்கான உச்ச அளவு) | 400,000 | 200,000 |
| 01) வைத்தியசாலை மற்றும் நர்சிங் ஹோம் பராமரிப்புக் கட்டணம் | 160,000 | 80,000 |
| ஒரு நாளுக்கான அறைக் கட்டணம் உச்ச அளவாக | 8,500 | 7,500 |
| 02) வைத்திய ஆலோசனை நிபுணர் ஒருவரின் சிபாரிசின் பிரகாரம் பெற்றுக்கொடுக்கப்படும் விசேட சிகிச்சை மற்றும் தாதிச் சேவைகள் மற்றும் வைத்தியசாலை மற்றும் நர்சிங் ஹோம்களில் நிபுணத்துவ வைத்திய சிகிச்சைக்கான வைத்திய மற்றும் சத்திரசிகிச்சை செலவுகள் மற்றும் சத்திர சிகிச்சை அறைக்கான கட்டணம், சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்கள் மற்றும் உணர்வகற்றல் வைத்திய நிபுணர்களுக்கான கட்டணம், ஏற்றுக்கொள்ளப்பட்ட வைத்தியர் ஒருவரின் சிபாரிசின் பேரில் அல்லது வைத்தியசாலையொன்றில் அல்லது நர்சிங் ஹோம் ஒன்றில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளும்போது வைத்திய ஆலோசனை சேவைகள் அல்லது நிபுணத்துவ வைத்தியருக்கான கட்டணம், நுண் சிகிச்சைகள், எக்ஸ்ரே, வெப்பம் மற்றும் ரேடியம் மூலமான பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள், மின்சாரம் மூலமான சிகிச்சைகள், உடலியல் சிகிச்சைகள் உட்பட நிபுணத்துவ சேவைகள். | 240,000 | 120,000 |
| **மேலதிக காப்பீடுகள் (தனியார் வைத்தியசாலைகள்)** | | |
| 01) சாதாரணமான பிரசவத்திற்கான உச்ச அளவு | 160,000 | 80,000 |
| 02) சத்திர சிகிச்சை மூலமான பிரசவத்திற்கு | 200,000 | 150,000 |
| 03) இடுக்கிப் பாவனை (Forceps)/ அமுக்கம்(Vacuum) மூலமான பிரசவத்திற்கு | 200,000 | 150,000 |
| | | |
| **உள்ளக சிகிச்சை (அரசாங்க வைத்தியசாலைகள்)** | | |
| 01) அரசாங்க வைத்தியசாலையொன்றில் கட்டணம் செலுத்தாத வார்ட் ஒன்றில் தங்கி சிகிச்சை பெற்றிருந்தால் (ஒரு நாளைக்கு)<br>உச்சளவு 30 தினங்களுக்கான கட்டணம் மீளளிப்புச் செய்யப்படும். | 3,500 | 2,000 |
| 02) அரசாங்க வைத்தியசாலையொன்றில் கட்டணம் செலுத்தாத வார்ட் ஒன்றில் தங்கியிருந்த சிகிச்சை பெறும்போது வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் மருந்துகள் ,பரிசோதனைகள், எக்ஸ்ரே, வெப்பச் சிகிச்சை மற்றும் ரேடிய சிகிச்சைகள், மின்சாரம் மூலமான சிகிச்சைகளுக்காக | 100,000 | 75,000 |
| | | |
| **ஏனைய காப்பீடுகள்** | | |
| 01) இரட்டைக் குழந்தைப் பிரசவத்திற்கான காப்பீடு | 25,000 | 10,000 |
| 02) கண்ணில் வெள்ளையை அகற்றும் சத்திர சிகிச்சையும் (Eye Cataract surgery) காப்பீடு செய்யப்படுவதுடன் அதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை வில்லைக்கு | 30,000 | 30,000 |
| | | |
| **திடீர் விபத்துக் காப்பீடு (பல்கலைக்கழக சேமலாப நிதிய ஊழியருக்கு மட்டும்)** | | |
| 01) திடீர் விபத்தின்போது ஏற்படும் மரணத்தின்போது | 500,000 | 500,000 |
| 02) இயற்கை மரணத்தின்போது | 100,000 | 100,000 |
| | | |
| **வரி மற்றும் நிர்வாகக் கட்டணம் அற்ற வருடாந்த தவணைக் கட்டணம்:** | | |
| தனி நபருக்காக | 17,500 | 8,250 |
| குடும்ப அலகொன்றுக்காக | 20,750 | 9,650 |
| | | |
| **வரி மற்றும் நிர்வாகக் கட்டணத்துடனான வருடாந்த தவணைக் கட்டணம்:** | | |
| தனி நபருக்காக | 20,070 | 9,462 |
| குடும்ப அலகொன்றுக்காக | 23,797 | 11,067 |
| | | |
| **ஆபத்தான நோய்களுக்கான காப்பீடு ( பல்கலைக்கழக சேமலாப நிதிய ஊழியருக்கு மட்டும் / 24 ஆபத்தான நோய்கள்)** | | |
| ஒரு வருடத்தில் நபரொருவருக்கு ஒரு சந்தர்ப்பத்திற்கான உச்ச அளவு **(*UPF* ஊழியருக்கு மட்டும் )** | 800,000 | 600,000 |
| வருடமொன்றுக்கான உச்ச அளவு | 24,000,000 | 18,000,000 |
| வருடமொன்றுக்கான உச்ச அளவு சந்தர்ப்பங்கள் | 30 | 30 |

05) **பதிவு செய்யும் முறை**

இணைப்பு I – i இன் கீழ் காணப்படும் படிவம் 01- A இன் பிரகாரம் தகைமை பெற்ற ஊழியர்களை பதிவுசெய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் / பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களின் பதிவாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. இணைப்பு II இல் காணப்படும் படிவம் II இனை 02 பிரதிகளுடன் தகைமை பெற்ற ஊழியர்கள் தனிப்பட்ட ரீதியில் பூரணப்படுத்தி அவர்கள் பணிபுரியும் பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவகங்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

06) **தவணைக் கட்டணம் செலுத்தல்**

ஆரம்பத்தில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் தவணைக் கட்டணத்தைச் செலுத்தும் மாற்று வழியொன்று அறிவிக்கப்படும் வரை ஊழியர்கள் தனிப்பட்ட ரீதியில் காப்புறுதித் தவணைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

குறிப்பிட்ட காப்புறுதித் தவணைக் கட்டணத்தை பதிவு செய்யப்பட்ட ஊழியர்களின் மாதாந்தச் சம்பளத்திலிருந்து அல்லது வேறு ஏதேனும் முறையில் அறவிட்டு இணைப்பு I – ii இல் காணப்படும் படிவம் 01 – B இன் பிரகாரம் அங்கத்தவர்களின் பெயர் பட்டியலுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைத்தல் பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்களது பொறுப்பாகும்.

07) **காப்புறுதித் திட்டத்தின் கீழ் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் முறை**

சகல காப்புறுதி உரிமை கோரல்களும் காப்பீட்டை வழங்குபவர்களினால் கீழ் குறிப்பிடப்படும் வகையில் தீர்க்கப்படும்.

அ) நேரடி முறை (அட்டை முறை) - இணைப்பு V இல் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் "Health Plus" அட்டையை குறிப்பிட்ட வைத்தியசாலையில் சமர்ப்பிப்பதன் மூலம்.

ஆ) ஈடு செய்தல் (reimbursement) முறை - சகல மருத்துவக் கட்டணங்கள் மற்றும் வைத்தியசாலை பற்றுச் சீட்டுக்களுக்கான விண்ணப்பங்களும் குறிப்பிட்ட பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவகத்தின் தாபனப் பிரிவின் ஊடாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இ) ஆபத்தான நோய்களுக்கான (Critical Illness) காப்பீட்டுத் தொகைக்கான பற்றுச் சீட்டுக்கள் ஈடு செய்தல் முறையில் (reimbursement of bills) மட்டுமே தீர்க்கப்படும்.

**08) மாற்று அனுகூலங்கள் - கூட்டு ஆயுள் காப்பீடு (Group Term Life Assurance Cover)**

உத்தேச மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் அங்கத்தவர்களுக்கு இணைப்பு V இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுகூலங்கள்(benefits) மற்றும் விலை விகிதங்களின் (Rates) அடிப்படையில் இந்தக் காப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**09) மிகக் குறைந்த அங்கத்துவ எண்ணிக்கை**

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன விதிமுறைகளின் பிரகாரம் மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கு குறைந்தது 10,000 அங்கத்தவர்களும் கூட்டு ஆயுள் காப்புறுதித் திட்டத்திற்கு குறைந்தது 4,000 அங்கத்தவர்களும் இருத்தல் அவசியமாகும். அதற்கமைய, மேலே குறிப்பிடப்பட்ட குறைந்த அங்கத்துவம் இல்லாத சந்தர்ப்பத்தின்போது இந்த காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்தும் பொறுப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்காது.

இந்த உத்தேச மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் இதில் இணைவதற்கு இணக்கம் தெரிவிக்கும் தகைமை பெற்ற ஊழியர்களின் பெயர் பட்டியலை இணைப்பு I இன் பிரகாரம் 2015 ஜுலை மாதம் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றது.

இது சம்பந்தமான சகல படிவங்களையும் **www.ugc.ac.lk** எனும் இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹுான் த சில்வா**
தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் /உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் /உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்.
15. உயர் கல்வி நிறுவகங்களின் பிரதி /சிரேஷ்ட உதவி /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. தொழிற் சங்கங்களின் செயலாளர்கள்.
17. தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள்
17. கணக்காய்வாளர் நாயகம்.

# பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.

பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவகம் : ……………………………………………………………………………

தகைமை பெற்றுள்ள அங்கத்தவர்களின் பெயர் பட்டியல்

| அங்கத்தவர் பற்றிய தகவல்கள் | | | | | | சார்ந்து வாழ்பவர்கள் பற்றிய தகவல்கள் | | காப்பீட்டுத் திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அங்கத்தவரின் பெயர் | சேமலாப நிதிய இலக்கம் | நிரந்தர நியமனத் திகதி | சேவை நிலைமை(நிரந்தரம் / தற்காலிகம்) | தேசிய அடையாள அட்டை இலக்கம் | பிறந்த திகதி | சார்ந்து வாழ்பவர்களின் பெயர்கள் | பிறந்த திகதி | காப்பீட்டுத் திட்டம் 01 | காப்பீட்டுத் திட்டம் 02 |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

…………………………………………

பி.செ / சி.உ.செ / உ.செ கையொப்பம்
(தாபனப் பிரிவு)

…………………………

செயலாளர் / பதிவாளர் கையொப்பம்

மேற்குறிப்பிட்ட தகவல்களை பூரணப்படுத்தியதன் பின்னர் உங்களுக்கு வழங்கப்பட்ட அச்சுப் பிரதி (Hard copy) யுடன் மென் பிரதியை(soft copy) கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு 2015 ஜுலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும். ( insurance@ugc.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கும் மென் பிரதியை(soft copy) அனுப்ப முடியும்)

# பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.

பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவகம் : ........................................................................................

தகைமை பெற்றுள்ள அங்கத்தவர்களின் காப்புறுதித் தவணைக் கட்டணம்

| அங்கத்தவர் பற்றிய தகவல்கள் | | | காப்புறுதித் தவணைக் கட்டணம்(ரூபா) | | கூட்டு ஆயுள் காப்புறுதித் தவணைக் கட்டணம்(ரூபா) |
|---|---|---|---|---|---|
| அங்கத்தவரின் பெயர் | சேமலாப நிதிய இலக்கம் | நிரந்தர நியமனத் திகதி | காப்பீட்டுத் திட்டம் 01 | காப்பீட்டுத் திட்டம் 02 | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

.....................................................
பி.நி.பொ / சி.உ.நி.பொ / உ.நி.பொ கையொப்பம்
(நிதிப் பிரிவு)

.............................
நிதிப் பொறுப்பாளரின் கையொப்பம்

மேற்குறிப்பிட்ட தகவல்களை பூரணப்படுத்தியதன் பின்னர் உங்களுக்கு வழங்கப்பட்ட அச்சுப் பிரதி (Hard copy) யுடன் மென் பிரதியை(soft copy) கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு 2015 ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும். ( insurance@ugc.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கும் மென் பிரதியை(soft copy) அனுப்ப முடியும்)

படிவம் 02

இணைப்பு II

காப்பீட்டுத் திட்டம் I ☐

II ☐

| ஊழியர் இல. |
|---|
| |

## பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் - 2015

## விண்ணப்பப் படிவம்

பல்கலைக்கழகம் /உயர் கல்வி நிறுவகம்:

..................................................................................................................................................

1) முதலெழுத்துக்களுடன் அங்கத்தவரின் பெயர்:

...........................................................................................

2) தற்போது வகிக்கும் பதவி: ..................................................................................................

3) பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் இலக்கம் : ...........................................................

4) பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்துவத்தைப் பெற்ற திகதி:...........................

5) பிறந்த திகதி:..................................................................................................................

6) தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................

7) சொந்த முகவரி:..............................................................................................................

8) குடியியல் நிலைமை:...................................................................................

9) குடும்ப அலகு பற்றிய தகவல்கள் :

i) வாழ்க்கைத் துணையின் பெயர்
(திருமணமாகி இருப்பின்) பிறந்த திகதி தே.அ.அ.இல.

.............................................. ..................... .................

ii) 0 - 21 வயதுவரையிலான திருமணமாகாத பிள்ளைகள் பற்றிய விபரம்:

| பிள்ளைகளின் பெயர்கள் | பிறந்த திகதி | தே.அ.அ.இல. (18 வயதற்கு மேல்) |
|---|---|---|
| .............................................. | ..................... | ................. |
| .............................................. | ..................... | ................. |
| .............................................. | ..................... | ................. |

10) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்

11) கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான வருடாந்த தவணைப் பணத்தை உனது மாதச் சம்பளத்திலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

a) மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான வருடாந்த தவணைப் பணம் ரூபா:

.....................................

b) கூட்டு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கான வருடாந்த தவணைப் பணம் ரூபா:

.....................................

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

<u>குறிப்பு:</u> இந்த விண்ணப்பப்பத்திரம் குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் / உயர் கல்வி கற்கை நிறுவகத்தின் உபயோகத்திற்கு மாத்திரமாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்ப வேண்டியதில்லை.

இணைப்பு III

## காப்புறுதித் திட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் விதிகள்

1. **குடும்ப அலகு** - காப்புறுதியாளர், வாழ்க்கைத் துணை மற்றும் 21 வயதை விடக் குறைந்த பிள்ளைகள்

2. **வயதெல்லை** - 18 - 65 வயதுக் கிடைப்பட்ட வயது வந்தோருக்காக / 00 - 21 வயதுக் கிடைப்பட்ட பிள்ளைகளுக்காக ( இறுதிப் பிறந்த திகதி)

3. மருத்துவருக்கான கட்டணம் மற்றும் மருந்துகள், பரிசோதனைகளுக்கான கட்டணம் என்பன சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டே செலுத்தப்படும்

4. Endoscopy, Colonoscopy மற்றும் அதனோடு தொடர்பான நடவடிக்கைகளுக்குச் செலவாகும் மருத்துவச் செலவுகளுக்கு உச்சளவாக ரூபா 7500/= செலுத்தப்படும்.

5. குழந்தைப் பிரசவத்திற்கான காப்பீடு நீக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து சார்ந்து வாழ்வோர் பற்றிய விபரங்களும் காப்புறுதி செய்யப்படும்போது அல்லது அதனை புதுப்பிக்கும்போது உட்படுத்துதல் வேண்டும். காப்புறுதிப் பத்திரம் செல்லுபடியாகும் கால எல்லைக்குள் உட்படுத்தப்பட மாட்டாது.

6. கர்ப்ப காலத்தில் மேற்கொள்ளப்படும் சிக்கலான பரிசோதனைகள் மற்றும் வைத்திய நிபுணர்களின் கட்டணம் காப்பீட்டுக்குள் அடங்கும்.

7. திடீர் விபத்து காரணமாக வைத்தியசாலையில் தங்கியிருந்து (Indoor) மேற்கொள்ளப்படும் பல் சத்திர சிகிச்சை மாத்திரம் (பூரணமாக உணர்வகற்றி /GA) காப்பீடு செய்யப்படுவதுடன் செலவாகும் மருத்துவச் செலவுகளுக்கு உச்சளவாக ரூபா 30,000/= செலுத்தப்படும்.

8. வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுக்கொண்டதன் பின்னர் நோய் கண்டறிதல் அட்டையில் (diagnosis card) வைத்தியர் நியமிக்கும் மருந்துகளில் இரண்டு கிழமைகளுக்கான மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு மாத்திரமே செலுத்தப்படும்.

9. ஒரு வருடத்திற்கான உச்சளவு காப்பீட்டுத் தொகையின் அளவு அந்த வருடத்தினுள் அதிகரிக்கப்படமாட்டாது.

10. சகல அங்கத்தவர்கள் மற்றும் சார்ந்து வாழ்பவர்கள் பற்றிய விபரம் காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

11. காப்பீட்டுத் தொகையைச் செலுத்தும்போது பற்றுச் சீட்டுக்களுக்கு ஈடு செய்தல் முறையினூடாக (reimbursement of bills) மாத்திரமே செலுத்தப்படும்.

12. வழக்கமான மருத்துவ பரிசோதனைகள் (Routine Medical checkups) காப்பீட்டுக்குள் உட்படுத்தப்படமாட்டாது.

13. கீழ் குறிப்பிடப்படும் மருத்துவ பரிசோதனைகளுக்கான செலவுகள் உள்ளக (Indoor) சிகிச்சைகளுக்கான வரையறைக்குள் ஈடு செய்யப்படுவதுடன் அதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல் அவசியமன்று.
    a) MRI
    b) Endoscopy
    c) Colonoscopy
    d) Bronchoscopy
    e) Sigmoidoscopy
    f) CT Scan

14. நடமாடும் மருத்துவ சிகிச்சையங்கள் (Mobile Clinics) ஊடாக மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனை அறிக்கைகளுக்காக செலுத்தப்பட மாட்டாது.

15. ஆபத்தான நோய்களுக்கான (Critical Illness) காப்பீட்டுத் தொகையைச் செலுத்தும்போது 24 ஆபத்தான நோய்களுக்கு மாத்திரமே பற்றுச் சீட்டுக்கள் ஈடு செய்யப்படும் (reimbursement of bills). சத்திர சிகிச்சைகளுக்கு மாத்திரம்.

16. லங்கா ஹொஸ்பிட்டலில் (Appolo Hospital) அறவிடப்படும் மருத்துவருக்கான கட்டணம் மற்றும் மருந்துகளுக்கான செலவுகளின் அடிப்படையில் அறவிடப்படும் மருத்துவ நிர்வாகக் கட்டணங்கள் காப்பீட்டுக்குள் உள்ளடக்கப்பட மாட்டாது.

17. இலங்கைக்குள் மாத்திரமே இந்தக் காப்பீடு அமுல்படுத்தப்படும்.

18. வெளி உபகரணங்களுக்காக செலுத்தப்படமாட்டாது.

19. உள்ளக சிகிச்சைகளுக்கான அனைத்து செலவு கோரல்களும் 90 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

20. காப்புறுதிப் பத்திரமானது நிபந்தனைகள் மற்றும் நிராகரிப்புக்களுக்கு உட்பட்டதாகும்.

இணைப்பு IV

**ஆபத்தான நோய்கள் காப்பீட்டுப் பட்டியல் (அங்கத்தவருக்கு மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சைகளுக்கு மாத்திரம்)**

1. இருதய நோய்கள் ( இருதய இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதனால் ஏற்படும் நோய் நிலைமைகள்)
2. இருதய இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புக்களை சீர் செய்வதற்கான சத்திர சிகிச்சை.
3. ஸ்ட்ரோக் ( மூளையில் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுதல் அல்லது அவற்றில் வெடிப்பு ஏற்படுவதனால் ஏற்படும் நோய் நிலைமைகள்.
4. புற்று நோய் (ஆபத்தான நோய்களுக்கான காப்பீடுகளில் அளவு கதிர் வீச்சு மற்றும் கிமோ தெரபி (Chemo Theraphy) சிகிச்சைகளுக்காக செலுத்தப்படும்.
5. சிறுநீரகங்கள் செயலிழத்தல்
6. முக்கிய அங்க அவயவங்களை மாற்றுவதற்கான சத்திர சிகிச்சை. ஆனாலும் அந்த சத்திர சிகிச்சைக்காக அவயவங்களை வழங்குபவர்களுக்குச் செலுத்துவதற்கு பணம் வழங்கப்பட மாட்டாது.
7. பக்கவாதம்
8. நரம்பிழையம் தடிப்படைதல் மற்றும் அழிவடைவதனால் ஏற்படும் நோய்.
9. நுரையீரல் உயர் குருதி அமுத்தம்.
10. ஈரலில் கடுமையான வைரஸ் தொற்று
11. இருதய அடைப்பிதழ் சத்திர சிகிச்சை
12. பெருநாடியில் ஏற்படும் நோய்களுக்கான சத்திர சிகிச்சை
13. நாட்பட்ட ஈரல் நோய்கள்
14. பாரிய எரி காயம்
15. குருட்டுத் தன்மை
16. செவிட்டுத் தன்மை
17. தசை நார் தேய்வினால் ஏற்படும் நோய்
18. பேச்சு இழப்பு
19. நாட்பட்ட நுரையீரல் நோய்கள்
20. மூளைக் கலங்கள் அழிவடைவதனால் நிரந்தர கோமா நிலையை அடையும் நோய்
21. இரத்தக் குழாயொன்றின் அடைப்பை சீர் செய்வதற்கான சத்திர சிகிச்சை
22. மூளையில் புற்றுநோய் அல்லாத கட்டிகள்
23. கடுமையான சுயநினைவற்ற நிலை(கோமா நிலை)
24. இயக்க நரம்புக்கல நோய்

இணைப்பு V

"Health Plus" அட்டை முறைக்கு (நேரடி செலுத்தல் முறை) அங்கீகரிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகள்

| | வைத்தியசாலையின் பெயர் | தொ.பே.இல: |
|---|---|---|
| 1 | அப்பலோ தனியார் மருத்துவமனை – கொழும்பு 05 | 011-4530 000 |
| 2 | சென்ட்ரல் மருத்துவமனை-கொழும்பு 10 (ஆஷா) | 011-4660 000 |
| 3 | ஆசிரி மருத்துவமனை-கொழும்பு 05 | 011-4523 000 |
| 4 | ஆசிரி சத்திர சிகிச்சை மருத்துவமனை -கொழும்பு 05 | 011-2368 407 |
| 5 | டர்டன்ஸ் மருத்துவமனை-கொழும்பு 03(இருதயப் பிரிவுக்கு அட்டை செல்லுபடியாகாது) | 011-2575 555 |
| 6 | ஜீவக்க மருத்துவமனை- பாதுக்கை | 011-2859 157 |
| 7 | கண்டி நர்சிங் ஹோம் லிமிடட் - கண்டி | 081-2222 041 |
| 8 | லேக் சயிட் மருத்துவமனை – கண்டி | 081-2223 466 |
| 9 | மெ-காத்தி மருத்துவமனை – கொழும்பு 07 | 011-2693 953 |
| 10 | மெடிக்கல் சென்டர் லிமிடட் - தெஹிவளை | 011-2717 979 |
| 11 | வின்செத மருத்துவமனை(முன்னர் மெடிகெயா மருத்துவமனை) கொழும்பு 10 | 011-2667 297 |
| 12 | நவலோக்க மருத்துவமனை- கொழும்பு 02 | 011-5577 111 |
| 13 | நிவ் டெல்மன் மருத்துவமனை-கொழும்பு 06. | 011-2586 893 |
| 14 | ஓசிஸ் மருத்துவமனை – கொழும்பு 05. | 011-5506 000 |
| 15 | பன்னிபிட்டிய நர்சிங் ஹோம். | 011-2840 384 |
| 16 | சுலைமான் மருத்துவமனை-கொழும்பு 14. | 011-2422 184 |
| 17 | சுவசெவன மருத்துவமனை- கண்டி | 081-2236 404 |
| 18 | கட்டுகுருந்த கிளினிக் என்ட் நர்சிங் | 034-2222 212 |
| 19 | லீசன்ஸ் மருத்துவமனை- ராகமை | 011-2951 488 |
| 20 | ஜோசப் பெரேஸர் மருத்துவமனை-கொழும்பு 07 | 011-2556 338 |
| 21 | நிவ் பிலிப் மருத்துவமனை- களுத்துறை | 034-2222 886<br>034-2222 888 |
| 22 | பானதுறை நர்சிங் ஹோம் | 038-2236 300 |
| 23 | ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை | 011-2778 610-12 |
| 24 | நயின் வெல்ஸ் கெயார் மருத்துவமனை(பிரைவட்) லிமிடட் | 011-4520 999 |
| 25 | கண்டி பிரைவட் மருத்துவமனை | 081-2234 338 |
| 26 | ரோயல் மருத்துவமனை-வெள்ளவத்தை | 011-2597 565 |
| 27 | கோல்டன் கீ ஈ.என்.ரீ மருத்துவமனை | 011-2880 288 |
| 28 | சென்ட் ஜோசப் மருத்துவமனை-நீர்கொழும்பு | 031-2225 474 |
| 29 | பெமிலி கெயார் - களுத்துறை | 034-2229 944 |
| 30 | ஆவே மரியா மருத்துவமனை -நீர்கொழும்பு | 031-2232 670<br>031-2222 974 |
| 31 | மொபைல் மெடிகெயா மருத்துவமனை – கண்டி | 081-2203 366<br>081-4470 366 |
| 32 | ஹேமாஸ் மருத்துவமனை- வத்தளை | 011-7888 888 |
| 33 | ஆரோக்யா மருத்துவமனை- கம்பஹா | 033-2224 592 |
| 34 | சித்தாலேப்ப ஆயுர்வேத மருத்துவமனை- கல்கிஸ்ஸ | 011-2721 365 |
| 35 | விவேக்கா மருத்துவமனை- வேயன்கொட | 033-2295 965 |
| 36 | கம்பஹா கூட்டுறவு மருத்துவமனை- கம்பஹா | 033-2222 201 |
| 37 | செத்மா மருத்துவமனை -கம்பஹா | 033-2233 501 |
| 38 | மெஹொட்டி(தனியார்) மருத்துவமனை – மாத்தறை | 041-2222 737 |
| 39 | மாத்தறை கூட்டுறவு மருத்துவமனை- மாத்தறை | 041-2222 084 |
| 40 | மாத்தறை ஆசிரி மருத்துவமனை (தனியார்) கம்பனி - மாத்தறை | 041-4390 900<br>041-2223 180 |
| 41 | கூட்டுறவு மருத்துவமனை – குருநாகல் | 037-2222 464 |

| | | |
|---|---|---|
| 42 | செத் செவன மருத்துவமனை – குருநாகல் | 037-2232 365 |
| 43 | நாவின்ன மருத்துவமனை – குருநாகல் | 037-2223 111 |
| 44 | கூட்டுறவு மருத்துவமனை – காலி | 091-2224 424 |
| 45 | ருஹுணு மருத்துவமனை – கராபிட்டிய, காலி | 091-2234 059 |
| 46 | ஹேமாஸ் மருத்துவமனை – காலி தெற்கு | 091-2222 187 |
| 47 | மிரெக்கல் மருத்துவமனை – குருநாகல் | 037-7390 350 |
| 48 | டாக்டர் நெவில் பெர்னாந்து போதனா வைத்தியசாலை - கடுவெல | 011-2407 608 |

**பற்றுச் சீட்டுக்களுக்கான செலவு கோரல்கள் ஈடு செய்யப்படாத மருத்துவமனைகளின் பெயர் பட்டியல்**

| | மருத்துவமனையின் பெயர் |
|---|---|
| 1 | பொரளை தனியார் கம்பனி |
| 2 | கொலொன்னாவ நர்சிங் ஹோம் |
| 3 | நுகேகொட நர்சிங் ஹோம் |
| 4 | ஹொரணை தனியார் மரத்துவமனை |
| 5 | சுவ சாந்தி மருத்துவமனை- அனுராதபுரம் |
| 6 | நவோத்யா மருத்துவமனை எம்பிலிபிட்டிய |

**பொதுவான ஏற்பாடுகள்**

1. தற்கொலை / தற்கொலை முயற்சி, மதுபானப் பாவனை, சமூக நோய்கள், மந்த புத்தி நிலைமைகள் / பைத்தியம் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் செலவுகள்

2. காப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னரே காப்புறுதியாளர் ஏதேனும் உடலியல் ரீதியான பலவீனத்தைக் கொண்டிருப்பின் அல்லது காப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அதனை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்காவிடில் அந்த நோய் காப்பீட்டுக்குள் அடக்கப்பட மாட்டாது.

3. கிளர்ச்சிகள், கலவரங்கள் மற்றும் பயங்கரவாத ஆபத்துக்கள் காப்பீட்டுக்குள் அடக்கப்பட மாட்டாது.

4. மருத்துவ சேவைகளுக்குள் உட்படாத செலவுகள்(தொலைக்காட்சி, தொலைபேசிக் கட்டணம், டெலெக்ஸ் கட்டணம், மேலதிக உணவுகளுக்கான கட்டணம், வானொலி போன்ற சேவைகளுக்காக வைத்தியசாலையால் அறவிடப்படும் கட்டணங்கள்)

5. பிறப்பிலிருந்தே காணப்பட்ட நோய்கள் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதனால் ஏற்படும் செலவுகள் காப்பீட்டுக்குள் அடக்கப்பட மாட்டாது.

6. பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை அல்லது அதற்கான செலவுகள் (திடீர் விபத்தின்போது தவிர)

7. கருத்தடை முறைகளுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் மற்றும் குறை மலட்டுத் தன்மை மற்றும் மலட்டுத் தன்மை காப்பீட்டுக்குள் அடக்கப்பட மாட்டாது.

8. லேசர் கதிர் சிகிச்சைக்கான செலவுகள் (lasic and Laser Treatments)

கூட்டு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கான செலவுகள் மற்றும் அனுகூலங்கள்

| வயதெல்லை | தனி நபருக்கான வருடாந்த தவணைக் கட்டணம் (ரூபா) | | | |
|---|---|---|---|---|
| | மாற்று வழி I | மாற்று வழி II | மாற்று வழி III | மாற்று வழி IV |
| 18 – 30 | 1,915 | 3,825 | 5,740 | 7,650 |
| 31 – 35 | 1,930 | 3,870 | 5,810 | 7,745 |
| 36 – 40 | 2,125 | 4,245 | 6,370 | 8,490 |
| 41 – 45 | 2,390 | 4,785 | 7,180 | 9,570 |
| 46 – 50 | 2,960 | 5,920 | 8,875 | 11,835 |
| 51 - 55 | 4,020 | 8,040 | 12,060 | 16,085 |
| 56 – 60 | 6,050 | 12,110 | 18,165 | 24,220 |
| 61 – 65 | 9,650 | 19,295 | 28,940 | 38,590 |

| அனுகூலங்கள் | காப்பீட்டுத் தொகை | | | |
|---|---|---|---|---|
| | மாற்று வழி I | மாற்று வழி II | மாற்று வழி III | மாற்று வழி IV |
| ஆயுள் காப்பீடு | 500,000 | 1,000,000 | 1,500,000 | 2,000,000 |
| திடீர் விபத்து காரணமாக மரணித்தல் | 500,000 | 1,000,000 | 1,500,000 | 2,000,000 |
| திடீர் விபத்து காரணமாக ஏற்படும் பூரண செயலிழந்த நிலை | 500,000 | 1,000,000 | 1,500,000 | 2,000,000 |
| நோய் காரணமாக ஏற்படும் பூரண செயலிழந்த நிலை | 500,000 | 1,000,000 | 1,500,000 | 2,000,000 |
| திடீர் விபத்து காரணமாக ஏற்படும் பகுதி செயலிழந்த நிலை | 500,000 | 1,000,000 | 1,500,000 | 2,000,000 |

<u>குறிப்பு:</u> மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளில் ஒரு நிகழ்வாவது ஏற்பட்டால் காப்பீட்டுத் தொகை அங்கத்தவருக்கு / அவரால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவருக்கு செலுத்தப்படும்.